போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

III-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்

SUPPLEMENT TO PART III OF THE FORT ST. GEORGE GAZETTE,

JUNE 20, 1922.

ந. 9 (4).] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலே, 1922-ம் ௵ ஜூன் ௴ 20௳. [விலே, 1 அ.

இந்தியா கவர்னமெண்ட் ஆக்ட்

ACT OF THE GOVERNMENT OF INDIA.

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்டு கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆக்ட்.

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது 1922-ம் ௵ மார்ச் ௴ 27௳ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனல் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகிறது :—

ACT No. XII OF 1922.

1922-ம் ௵த்து 12-வது ஆக்ட்.

AN ACT TO FIX THE DUTY ON SALT MANUFACTURED IN, OR IMPORTED BY LAND INTO, CERTAIN PARTS OF BRITISH INDIA, FURTHER TO AMEND THE INDIAN TARIFF ACT, 1894, AND THE INDIAN POST OFFICE ACT, 1898, TO AMEND THE INDIAN PAPER CURRENCY (AMENDMENT) ACT, 1920, TO IMPOSE AN EXCISE DUTY ON KEROSENE, TO FIX RATES OF INCOME-TAX AND TO ABOLISH THE FREIGHT TAX.

ப்ரிடிஷ் இந்தியாவின் சில பாகங்களில் செய்யப்படுகிற அல்லது அவைகளுக்குள் தரைமார்க்கமாய் இறக்குமதி செய்யப்படுகிற உப்புக்குத் தீர்வை நிஷ்கரிஷை செய்வதற்கும், 1894-ம் ௵த்திய இந்துதேசத்து டாரிப் ஆக்டையும் 1898-ம் ௵த்து இந்தியன் போஸ்டாபிஸென்னும் தபால் இலாகா ஆக்டையும் பின்னும் திருத்துவதற்கும், 1920-ம் ௵த்திய இந்துதேசத்து நோட செலாவணி (திருத்துவதற்கான) ஆக்டைத் திருத்துவதற்கும், கெரொஸின் எண்ணெய்க்கு எக்ஸைஸ் (சாயர்) தீர்வை விதிப்பதற்கும், வருமானவரி வீதங்களை நிஷ்கரிஷை செய்வதற்கும், (சரக்குகளுக்கு) கேள்வு வரியை எடுத்துவிடுவதற்குமான ஆக்ட்.

ப்ரிடிஷ் இந்தியாவின் சில பாகங்களில் செய்யப்படுகிற அல்லது அவைகளுக்குள் இறக்குமதி செய்யப்படுகிற உப்புக்குத் தீர்வையை நிஷ்கரிஷை செய்வதும் 1894-ம் ௵த்திய இந்துதேசத்து டாரிப் ஆக்டையும் 1898-ம் ௵த்து இந்தியன் போஸ்டாபிஸென்னும்

தபால் இலாகா ஆக்டையும் பின்னும் திருத்துவதும் 1920-ம் ஹூ த்திய இந்துதேசத்து நோட் செலாவணி (திருத்துவதற்கான) ஆக்டைத் திருத்துவதும் கெரொஸின் எண்ணெய்க்கு எக்ஸைஸ் (சாயர்) தீர்வை விதிப்பதும் வருமானவரி வீதங்களை நிஷ்கரிஷை செய்வதும் (சாக்குகளுக்கு) கேள்வு வரியை எடுத்துவிடுவதும் யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிககப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயரும் வியாபகமும் செலாவணியாய்க்கொண்டிருக்கும் காலமும்.

1. (1) இந்த ஆக்டை, 1922-ம் ஹூ த்திய இந்துதேசத்து ஆசிறை சம்பந்தமான ஆக்ட் என்று சொல்லலாம்.

(2) இது - ஸந்தால் பர்க்கனுக்களும் 5-வது பிரிவு சம்பந்தப்பட்டமட்டில் தவிர ப்ரிடிஷ் பலுசிஸ்தானமும் உட்பட ப்ரிடிஷ் இந்தியா முழுமைக்கும் வியாபிக்கிறது.

(3) 2-வது, 4-வது, 7-வது பிரிவுகள் - 1923-ம் வருஷம் மார்ச் மாதம் 31-ம் தேதி வரையில் மாத்திரம் செலாவணியாய்க்கொண்டிருக்கும்.

உப்புக்குத் தீர்வை நிஷ்கரிஷை செய்வது.

2. 1922-ம் வருஷம் மார்ச் மாதம் முதல் தேதியிலிருந்து, பர்மாவும் ஏடனுமல்லாமல் ப்ரிடிஷ் இந்தியாவின் வேறே யாதொரு பாகத்தில் செய்யப்படுகிற அல்லது அதற்குள் இறக்குமதி செய்யப்படுகிற உப்புக்கு 1882-ம ஹூ த்திய இந்துதேசதது உப்பு ஆக்ட் 7-வது பிரிவின்படி செய்யப்பட்ட விதியின மூலமாய் ஆலோசனை சபையிலுள்ள கவர்னா ஜெனரலவர்சள் தீர்வை விதிப்பதற்கு அந்தப் பிரிவிற்கணட நிபந்தனைகளின் பிரகாரம் அதிகாரம் ஏற்படுகிறமட்டில், அப்படிபபட்ட யாதொரு பாகத்தில் செய்யப்படுகிற அல்லது அதற்குள் தரைமார்க்கமாக இறக்குமதி செய்யப்படுகிற உப்புக்கு அவார்டுபாய் எடைப்படி $82\frac{2}{7}$ பவுண்ட் கொண்ட மணங்கு ஒனறுக்கு ஒரு ரூபாய் நாலணு வீதம் அந்த நிபந்தனைகளினுல் தீர்வை விதிக்கப்பட்டிருபபதாக அவைகக்ளுகு அர்த்தம் பணணவேண்டும். மேலும், அந்தத் தீர்வையானது - ஷை ஆக்டின் சகல காரியங்களுக்காகவும் அந்தப் பிரிவின்படி செய்யப்பட்ட விதியினுல் விதிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும். 1882-ம் ஹூ த்து 12-வது ஆக்ட்.

1894-ம் ஹூ த்து 8-வது ஆக்டில் திருத்தம்.

3. (1) 192 -ம் வருஷம் மார்ச் மாதம் முதல் தேதியிலிருந்து, 1894-ம் ஹூ த்திய இந்துதேசத்து டாரிப் ஆக்டின் இரண்டாவது ஷெட்யூலுக்கு பர்த்தியாக இந்த ஆக்டின் முதல் ஷெட்யூலில் அடங்கியுள்ள ஷெட்யூலை அமைத்துக்கொள்ளவேண்டும. 1894-ம் ஹூ த்து 8-வது ஆக்ட்.

(2) அதே தேதியிலிருந்து, 1921-ம் ஹூ த்திய இந்துதேசத்து அரசிறை சமபந்தமான ஆக்ட் 2-வது பிரிவும் அந்த ஆக்டின் முதல் ஷெட்யூலும் ரத்தாய்விடும். 1921-ம் ஹூ த்து 6-வது ஆக்ட்.

1898-ம் ஹூ த்து 6-வது ஆக்டில் திருத்தம்.

4. 1922-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து, இந்த ஆக்டின் இரண்டாவது ஷெட்யூலில் அடங்கியிருக்கும் ஷெட்யூலை, 1898-ம ஹூ த்து இந்தியன் போஸ்டாபிஸென்னும் தபால் இலாகா ஆக்டில் அந்த ஆக்டின் முதல் ஷெட்யூலாக அமைத்துக்கொள்ள வேண்டும. 1898-ம் ஹூ த்து 6-வது ஆக்ட்.

கெரொஸின் எண்ணெய்க்கு எக்ஸைஸ் தீர்வை விதிப்பது.

5. 1922-ம் வருஷம் மார்ச் மாதம் முதல் தேதியிலிருந்து, 1917-ம் ஹூ த்து மோடார், ஸ்பிரிட் (தீர்வைகளைக்குறித்த) ஆக்டில் மோடார் ஸ்பிரிட்டுக்கு எக்ஸைஸ் தீர்வை விதித்து வசூலிப்பதற்காகக் கண்டிருக்கும் நிபந்தனைகள், எனவே அந்த ஆக்டின் 6-வது பிரிவு நீங்கலாக அதில்கண்ட சகல நிபந்தனைகளும் - (அந்த ஆக்ட் 2-வது பிரிவைச் சேர்ந்த இரணடாவது பகுதியில் மோடார் ஸ்பிரிட்டைக் குறித்துச் சொல்லியிருப்பதைத் தவிர) அந்த ஆக்டில் மோடார் ஸ்பிரிட்டைக் குறித்துச் சொல்லியிருக்கும் மற்ற இடங்களிலெல்லாம் கெரொஸின் எண்ணெயைக் குறித்துச் சொல்லியிருப்பது போலவே, கெரொஸின் எண்ணெய்க்கு எக்ஸைஸ் தீர்வை விதித்து வசூலிக்கும் காரியத்துக்காகவும பிரயோகப்படும் : 1917-ம் ஹூ த்து 2-வது ஆக்ட்.

ஆனுல், இம்பீரியல் காலன் ஒன்றுக்கு ஒரு அணு வீதம் கெரொஸின் எண்ணெய்க்குத் தீர்வை விதித்து வசூலிக்கப்படும்.

விவரணம்.—இந்தப் பிரிவின் காரியங்களுக்காக, "கெரொஸின் எண்ணெய்" என்பது-

(a) 1899-ம் ஹூ த்திய இந்துதேசத்து பிட்ரோலியம் எண்ணெய் ஆக்ட் 2-வது பிரிவில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடிக்குள்ள பிட்ரோலியம் எண்ணெயிலிருந்து செய்யப்பட்டதும், 1899-ம் ஹூ த்து 8-வது ஆக்ட்.

(b) விளக்கேற்றும் காரியங்களுக்காக திரவரூபமாய் உபயோகிக்க உத்தேசிக்கப்பட்டதும் அல்லது அந்தப்படி சாதாரணமாய் உபயோகிக்கப்படுவதுமான

(மோடார் ஸ்ப்ரிட் நீங்கலாக, ஹைட்ரோ கார்பன் என்னும் நாரபார்த்திவ வகைகள் சேர்ந்த யாதொரு கலப்பாவது ஹைட்ரோ கார்பன்கள் அடங்கிய யாதொரு திரவமாவது உட்பட) தீபபற்றி யெரியத்தகக யாதொரு ஹைட்ரோ கார்பன் என்று அர்த்தமாகும்.

1920-ம் வருஷத்து 45-வது ஆக்ட்.

1920-ம் வருஷத்து 45-வது ஆக்டில் திருத்தம்.

6. 1920-ம் வருஷத்திய இந்துதேசத்து நோட் செலாவணி (திருத்துவதற்கான) ஆக்ட் 13-வது பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில், "1921" என்னும் இலக்கத்துக்கு பர்த்தியாக "1923" என்னும் இலக்கத்தை அமைத்துக்கொள்ளவேண்டும்; மேலும், 1921-ம் வருஷம் எப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து அந்தப்படி அமைத்துக்கொள்ளப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

வருமானவரியும் ஸூபர் டாக்ஸ் என்னும் மேல்வரியும்.

7. (1) 1922-ம் வருஷம் எப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து ஆரம்பிக்கிற வருஷத்துக்கு மூன்றுவது ஷெட்யூலின் 1-ம் பாகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வீதங்களின்படி வருமான வரி விதிக்கப்படும்.

1922-ம் வருஷத்து 11-வது ஆக்ட்.

(2) 1922-ம் வருஷம் எப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து ஆரம்பிக்கிற வருஷத்திற்கு ஸூபாடாக்ஸ் என்னும் மேல்வரி வீதங்கள்-1922-ம் வருஷத்திய இந்து தேசத்து வருமான வரி ஆக்ட் 55-வது பிரிவின் காரியங்களுக்காக, மூன்றுவது ஷெட்யூலின் 2-ம் பாகத்தில் குறிப்பிடப்பட்டிருப்பவைகளாகும்.

1922-ம் வருஷத்து 11-வது ஆக்ட்.

(3) மூன்றுவது ஷெட்யூலின் காரியங்களுக்காக, "மொத்த வரும்படி" என்பது-1922-ம் வருஷத்திய இந்துதேசதது வருமான வரி ஆக்ட் 2-வது பிரிவைச் சேர்ந்த (15) குறிப்பிட்ட பகுதியில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடிக்குள்ள மொத்த வரும்படி என்று அர்த்தமாகும்.

1917-ம் வருஷத்து 13-வது ஆக்ட்.

1917-ம் வருஷத்து 13-வது ஆக்ட் ரத்தாவது.

8. 1922-ம் வருஷம் எப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து, 1917-ம் வருஷத்திய (ரெயில்வேக்கும் உள்நாட்டு நீராவிமரக்கலத்துக்கும் சம்பந்தப்பட்ட) கேள்வுவரி ஆக்ட் ரத்தாய்விடும்.

1-வது ஷெட்யூல்.

1894-ம் வருஷத்திய இந்துதேசத்து டாரிப் ஆக்டில் பர்த்தியாக அமைத்துக்கொள்ளவேண்டிய ஷெட்யூல்.

[3 (1)-வது பிரிவைப் பார்க்கவும்.]

"2-வது ஷெட்யூல்—இறக்குமதி டாரிப் (நிறுக்கு நாமா).

1-ம் பாகம்.

தீர்வையில்லாமல் இறக்குமதி செய்யக்கூடிய வஸ்துக்கள்.

ந. வஸ்துக்களின் பெயர்.

I.—போஜனம், பானம், புகையிலை.

1 ஹாப்ஸ் என்னும் சீமை முள்ளங்கி.

2 ப்ரிடிஷ் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டு, (வஸ்துக்கள்) தயார்செய்வது சம்பந்தமான எந்த முறையிலாவது உபயோகப்படுவதற்காக ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியை முன்னதாகப் பெற்று செய்யப்பட்ட விதிகளை அனுசரித்து, வெளிவிடப்பட்ட உப்பும்; கலகத்தா ரேவில் இறக்குமதி செய்யப்பட்டு, மழமழப்பாயும் பளபளப்பாயுமிருக்கும் கல்சாமான செய்பவர்களுககு வங்காள கவர்ன்மென்டாருடைய அனுமதியைப் பெற்று வெளிவிடப்பட்ட உப்பும்; வங்காளம், பீஹார்-ஒரிஸ்ஸா இந்த மாகாணங்களில் எந்த ரேவிலாவது இறக்குமதி செய்யப்பட்டு அந்த மாகாணங்களில் மீனைப் பதஞ்செய்வதில் உபயோகிப்பதற்காக, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியை முன்னதாகப் பெற்று செய்யப்பட்ட விதிகளை அனுசரித்து வெளிவிடப்பட்ட உப்பும்.

(உப்பின்மேல் பொதுவாய் விதிக்கப்படும் தீர்வைக்காக 35-ம் நம்பரைப் பார்க்கவும்.)

II.—வேலைசெய்யப்படாத வஸ்துக்களும் விளைபொருள்களும், பெரும்பாலும் தயார் செய்யப்படாத சாமான்களும்.

மாட்டுத்தோல முதலிய தோல்கள், பதம்பண்ணுதவை.

3 மாட்டுத்தோல் முதலிய தோல்கள், பதம்பண்ணுதவை அல்லது உப்பிட்டவை.

உலோக மண்.

4 உலோகமண், எல்லா வகைகளும்.

ரத்தனங்களும் முத்துகளும்.

5 ரத்தனங்கள், விடுதியானவையும் பட்டை தீர்க்காமல் இறக்குமதி செய்யப்பட்டவையும்; முத்துகள், விடுதியானவை.

விதைகள்.

6 இந்தியாவிலுள்ள யாதொரு (சுதேச) மன்னர் அலலது அதிபதியின் ராஜ்ஜியங்களிலிருந்து கடல் மார்க்கமாய் ப்ரிடிஷ் இந்தியாவுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய் விதைகள்.

ந. வஸ்துக்களின் பெயர்.

நெய்வதற்கான வஸ்துக்கள்.

7 பஞ்சு, பண்படுத்தாதது.

8 ஆட்டுமயிர், வேலைசெய்யப்படாதது; தும்பு எடுத்து சுத்தஞ்செய்யப்பட்ட வுல்டாப் என்னும் மயிர்ச்செண்டுகள் அல்லது கட்டுகள்.

பலவகைப்பட்டவை.

9 ஜெந்துக்களின் எலும்புகளும் பின்வரும் ரஸாயன சம்பந்தமான எருக்களும் உட்பட எல்லா வகையான எருக்களும் :—பேஸிக் ஸ்லாக் என்னும் உலோக சம்பந்தமான களிம்பு, அம்மோனியா நைட்ரேட், ஸோடா நைட்ரேட், பொட்ராஷ் மூரியேட், அம்மோனியா ஸல்பேட், பொடாஷ் ஸல்பேட், கைனிட் உப்புக்கள், லைம் நைட்ரேட், கால்ஷியம் ஷியனமைட், கனிஜ சம்பந்தமான பாஸ்பேட்டுகள், கனிஜ சம்பந்தமான ஸூபர்பாஸ்பேட்டுகள்.

10 மரக்கூழ், கந்தை முதலான காகிதம் செய்வதற்கான வஸ்துக்கள்.

III.—முழுவதுமாவது பெரும்பாலுமாவது தயார்செய்யப்பட்ட சாமான்கள்.

உடுப்பு.

11 யாதொரு ஸர்க்கார் உத்தியோகஸ்தரால் தம்முடைய சொந்த உபயோகத்துக்காக இறக்குமதி செய்யப்பட்ட ஒரே மாதிரியான (யூனிபாரம்) உடுப்புகளும் அவைகளுக்குச் சம்பந்தமான டப்பா, டவாலி முதலிய முஸ்தீதுகளும்.

ஆயுதங்களும் மருந்துகுண்டு முதலிய சாமான்களும் ராணுவ முஸ்தீதுகளும்.

12 அடியிற்கண்ட ஆயுதங்களும் மருந்துகுண்டு முதலிய சாமான்களும் ராணுவ முஸ்தீதுகளும் :—

(a) 42-ம் நம்பரின் 5-வது, 6-வது, 8-வது, 9-வது அல்லது 10 வது பாபத்தில் அடங்குகிற வஸ்துக்கள் 1-வது அல்லது 3-வது பாபத்தில் அடங்குகிற வெடி ஆயுதத்துக்கு உரியதாயிருந்து அந்த ஆயுதத்தோடுகூட அதே கேஸில் (பெட்டியில்) பொருத்தியிருக்கும்போது, அந்த வஸ்துக்கள்.

(b) டிப்ளாமாடிக் (ஸ்தானாபத்திய சம்பந்தமான), மிலிடெரி (ராணுவ சம்பந்தமான), நேவல் (கடற்படைசம்பந்தமான) ராயல் ஏர் போர்ஸ் (ராஜாங்க ஆகாயப் படை சம்பந்தமான) அல்லது பொலீஸ் யூனிபாரம் என்னும் உத்தியோக உடுப்பைத் தரித்துக்கொள்ள யோக்கியதையுடையவராய் மஹாராஜ சக்ரவர்த்தியவர்களின் ஊழியத்தைச் சேர்ந்துள்ள ஒரு கம்மிஷண்ட் அல்லது கெஜெட்டெட் (கெஜெட்டில் உத்தியோக முதலியவை குறிக்கப்படும்) உத்தியோகஸ்தரது கிரமமான முஸ்தீதின் பாகமாயிருக்கிற ஆயுதங்கள்.

(c) (i) மஹாராஜ சக்ரவர்த்தியவர்களுடைய ரெகுலர் போர்ஸ் என்னும் சைனியம் அல்லது இந்திய உதவிப் படை அல்லது இந்திய ஸ்தலப் படையைச் சேர்ந்த கம்மிஷண்ட ஆபிஸரோடுகூடவோ கெஜெட்டெட் பொலீஸ் ஆபிஸரோடுகூடவோ போகிறதாகவாவது, (ii) அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர் எதைச் சேர்ந்தவரோ அந்தக் கோரின் கம்மாண்டன்ட் என்னும் தளகர்த்தராலாகிலும், எந்த கோரையும் சேராமலிருக்கிற யாதொரு உத்தியோகஸ்தரின் விஷயத்திலே அந்த உத்தியோகஸ்தர் சேவகஞ்செய்கிற ஸ்டேஷன் அல்லது டிஸ்ட்ரிக்டின் தலைமை வகிக்கும் உத்தியோகஸ்தராலாகிலும், பொலீஸ் உத்தியோகஸ்தரின் விஷயத்திலே யாதொரு பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அல்லது பொலீஸ் கம்மிஷனராலாகிலும் அந்த உத்தியோகஸ்தருடைய முஸ்தீதுக்காக அவரால் இறக்குமதி செய்யப்பட்டதென்று உறுதிமொழி கூறப்படுகிறதாகவாவதுள்ள ஒரு ரிவால்வரும் தானாய் இயங்கும் பிஸ்டலும், அந்த ரிவால்வர் அல்லது பிஸ்டல் ஒவ்வொன்றுக்கும் மொத்தத்தில் 100 தரத்துக்கு மேற்படாமல் சுடுவதற்கு வேண்டிய மருந்துகுண்டு முதலியவையும்.

(d) ராணுவ அல்லது வாலன்டியர் வெகுமானங்களாக கொடுக்கப்படுவதற்கான கத்திகள்.

(e) இந்தியாவில் ஒரு சமஸ்தானத்தைச் சேர்ந்ததாய் இம்பீரியல் சேவகத்திற்காக ஏற்படுத்தி ஆதரிக்கப்படக்கூடிய ராணுவ சைனியங்களைச் சேர்ந்த யாதொரு பாகத்தின் உபயோகத்துக்காக இந்தியா கவர்ன்மெண்டாருடைய அனுமதியுடன் இறக்குமதி செய்யப்பட்ட ஆயுதங்களும் மருந்துகுண்டு முதலிய சாமான்களும் ராணுவ முஸ்தீதுகளும்.

(f) ப்ரிடிஷ் ரெஜிமெண்டுகளையும் இந்திய ரெஜிமெண்டுகளையுமாவது வாலன்டியர் கோரையாவது சேர்ந்திருப்பவர்களுக்கு கற்றுக்கொடுக்கும்பொருட்டு அந்த ரெஜிமென்டுகள் அல்லது கோருக்குத் தலைவர்களாயிருக்கிற உத்தியோகஸ்தர்களால் இறக்குமதி செய்யப்படுகிற மாரிஸ் ட்யூப்ஸ் என்னும் குழாய்களும் பேடென்ட் என்னும் அதிகார உரிமை பெற்ற மருந்துகுண்டு முதலிய சாமான்களும்.

ரஸாயன வஸ்துக்களும் மூலிகைகளும் ஔஷதங்களும்.

13 (ப்ளேக்) மஹாமாரி வராமல் தடுப்பதற்காகக் குத்திக்கொள்ளும் ஸீரம் என்னும் மாமிசநீர்.

14 க்வினைனும் சின்கோனா சேர்ந்த வேறே ஆல்கலாய்டுகளும்.

நெ. வஸ்துக்களின் பெயர்.

இரும்பு முதலிய உலோகத்தினால் செய்யப்பட்ட சாமான்களும் உபகரணங்களும் கருவிகளும்.

15 விவசாய சம்பந்தமான பின்வரும் உபகரணங்கள்; அவையாவன:—புடைப்பதற்கானவை, போரடிக்கும் சாதனங்கள், பயிர் முதலியவைகளை அறுப்பதற்கான யந்திரங்கள், கட்டு கட்டும் யந்திரங்கள், உயரத்திலிருக்கும் கிடங்குக்கு தானியத்தை ஏற்றுவதற்கான சாதனங்கள், விதைகளை நசுக்குவதற்கான சாதனங்கள், வைக்கோலைத் துண்டுகளாகக் கத்தரிப்பதற்கான சாதனங்கள், வேரை அறுக்கும் சாதனங்கள், கால்நடைத் தீனியாக சேர்த்து வைக்கப்படும் தானியத்தாள் முதலியவைகளை வெட்டுவதற்கான சாதனங்கள், குதிரைகளுக்கும் எருதுகளுக்கும் உபயோகிக்கும் சேணம் முதலிய சாமான்கள், கலப்பைகள், பூமியைத் தளர்த்தி களையெடுப்பதற்கான கல்டிவேடர் என்னும் சாதனங்கள், பூமியின் மேல்மண்ணைக் கிளறித் தளர்த்துவதற்கான ஸ்கேரிபையர் என்னும் உபகரணங்கள், விதைத்த நிலத்தைச் சமப்படுத்துவதற்கான பரம்புகள், மண் கட்டிகளை உடைக்கும் சாதனங்கள், புலத்தில் காடி அல்லது குழிசெய்து விதைவிதைப்பதற்கான யந்திரங்கள், காய்ந்த புல்லைக் கிளறி பரப்புவதற்கான யந்திரங்கள், வைக்கோல் முதலியவைகளைச் சேர்ப்பதற்கும் நிலத்தைக் கிளறிச் சமப்படுத்துவதற்குமான ரேக் என்னும் யந்திரங்கள்; விவசாய சம்பந்தமான ட்ராக்டர் என்னும் இழுப்பதற்கான சாதனங்கள்; இவைகளைத் தவிர, இந்த உபகரணங்கள் அல்லது ட்ராக்டர்களைச் சேர்ந்த பாகங்களும்; ஆனால், அவை எந்த உபகரணங்கள் அல்லது ட்ராக்டர்களுக்காக இறக்குமதி செய்யப்படுகின்றனவோ அவைகளிலே அவற்றின் சரியான இடங்களில் சுலபமாய்ப் பொருத்தக்கூடியவைகளாயும் விவசாயத்துக்குச் சம்பந்தப்படாத காரியங்களுக்குச் சாதாரணமாய் உபயோகிக்கக் கூடாதவைகளாயும் இருக்கவேண்டும்.

16 பாற்சாலை சம்பந்தமான பின்வரும் சாதனங்கள்; அவையாவன:—ஏட்டைப் பிரிப்பதற்கான கருவிகள், பாலைக் காய்ச்சிக் கிருமிகளை அழிப்பதற்கான அல்லது அது புளித்துப் போகாமலிருக்கும்படி செய்வதற்கான யந்திரம், பாலில் காற்று புகட்டுவதற்கும் அதைக் குளிரச்செய்வதற்குமான உபகரணம், கடைவதற்கான சாதனங்கள், வெண்ணெயிலிருந்து ஈரத்தைப் போக்குவதற்கான கருவிகள், வெண்ணெய் தயார்செய்வதற்கான கருவிகள்; இவைகளைத் தவிர, இந்த உபகரணங்களைச் சேர்ந்த பாகங்களும்; ஆனால், அவை எந்த சாதனங்களுக்காக இறக்குமதி செய்யப்படுகின்றனவோ அவைகளிலே அவற்றின் சரியான இடங்களில் சுலபமாய்ப் பொருத்தக்கூடியவைகளாயும் பாற்சாலை சம்பந்தமான காரியங்களல்லாத வேறே காரியங்களுக்குச் சாதாரணமாய் உபயோகிக்கக்கூடாதவைகளாயும் இருக்கவேண்டும்.

17 யாதொரு பிரயாணி தம்முடைய தொழில் அல்லது உத்தியோக அலுவலைச் செய்யும்பொழுது வாஸ்தவமாய் உபயோகிப்பதாயும், அவருடன் கொண்டுபோகும் சாமானாக அவரால் இறக்குமதி செய்யப்பட்டதாயுமுள்ள கருவிகளும் தளவாடங்களும் உபகரணங்களும்.

18 தண்ணீர் எடுக்கும் ஏற்றம் முதலிய சாதனங்களும், சர்க்கரை செய்வதற்கான ஆலைகளும், எண்ணெய்ச் செக்குகளும், அவைகளின் பாகங்களும், அவை கையாலாவது பிராணிகளைக் கொண்டாவது வேலைசெய்யப்படக்கூடியவிதமாய் அமைக்கப்பட்டிருக்கும்பொழுது.

உலோகங்கள்.

19 இந்தியா கவர்ன்மென்டைச் சேர்ந்ததாய்ச் செலாவணியிலிருக்கும் நிக்கல், ப்ரான்ஸ் (ஒருவித வெண்கலம்), செப்பு நாணயம்.

20 பொன்கட்டியும் வெள்ளிக்கட்டியும் நாணயமும்.

காகிதம்.

21 பாக்கெட்டாகவாவது புஸ்தகமாகவாவது பார்ஸலாகவாவது தபால்மூலமாய் இறக்குமதி செய்யப்பட்ட வியாபார வஸ்துக்களின் ஜாபிதாக்களும் அவைகளைப் பிரசித்தப்படுத்துவதற்கான விளம்பரங்களும்.

இழையும் நெய்யப்பட்ட வஸ்திரவகைகளும்.

22 ஜூட் என்னும் மரல் நாரினால் செய்யப்பட்ட பழைய அல்லது உபயோகப்படுத்தப்பட்ட கோணிப்பைகள்.

பலவகைப்பட்டவை.

23 அடியிற்கண்ட சித்திரவேலைகள்:—(1) பொது ஜனங்களின் பிரயோஜனத்துக்காக ஒரு பொது ஸ்தானத்தில் வைப்பதாய் உத்தேசிக்கப்பட்ட பிரதிமைகளும் சித்திரப்படங்களும், (2) பொது ஸ்தானத்தில் வைப்பதாய் உத்தேசிக்கப்பட்ட பொதுத்தன்மையுள்ள ஞாபகச் சின்னங்கள்; இவைகளை அமைப்பதில் உபயோகிக்கப்பட்ட அல்லது உபயோகிக்கப்படப்போகிற சாமான்கள், வேலைசெய்யப்பட்டவையாயிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி, அவைகளுட்பட.

24 அச்சிட்ட புஸ்தகங்களின் உறைகளுட்பட அப்படிப்பட்ட புஸ்தகங்களும், (மாப்) தேசபடங்களும், மானுமிப்படங்களும், ப்ளான்களும், ப்ரூப்புகளும் (திருத்துவதற்கான அச்சுப் பிரதிகளும்), சங்கீதசம்பந்தமான காகித முதலியவைகளும், கையெழுத்துப் பிரதிகளும்.

IV.—பலவகைப்பட்டவையும் வகுப்புகளாகப் பிரிக்கப்படாதவையும்.

25 பிராணிகள், உயிருடனிருப்பவை, சகலவிதமானவைகளும்.

26 பிரகிருதி சாஸ்திரத்தை விளக்கிக்காட்டக்கூடிய மாதிரிகளும் மெடல் என்னும் பதக்கங்களும் புராதனமான நாணயங்களும்.

2-ம் பாகம்.

[பிரத்தியேகமான வீதங்களின்படி தீர்வை விதிப்பதற்குட்பட்ட வஸ்துக்கள்.]

நம்பர்.	வஸ்துக்களின் பெயர்.	இவ்வளவுக்குத் தீர்வை அல்லது தீர்வை விதிக்கும் விதம்.	தீர்வை வீதம்.
	I.—போஜனம், பானம், புகையிலை.		ரூ. அ.
	மீன்.		
27	மீன், உப்பிட்டது, பச்சை அல்லது உலர்ந்தது.	அவார்டுபாய் எடையில் 82⁶⁄₇ பௌண்டுள்ள இந்திய மணங்கு ஒன்றுக்கு.	ஒரு ரூபாய்க்கு மேற்படாமல், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர்ஜெனரலவர்கள் இந்தியா கெஜெட்டில் விளம்பரமூலமாக அப்போதைக்கப்போது நிர்ணயிக்கும் தீர்வை வீதம் அல்லது வீதங்கள்.
	சாராய தினுசுகள்.		
28	ஏல், பீர், போர்ட்டர், ஸைடர், புளிப்பேறிப் பொங்குகிற இதர சாராய தினுசுகள்.	இம்பீரியல் காலன் 1-க்கு அல்லது 6 க்வார்ட் புட்டிகளுக்கு.	எட்டு அணா.
29	மனிதர் குடிப்பதற்குச் சுத்தமாய் எப்போதும உதவாததாகச் செய்யப்பட்ட ஸ்பிரிட்.	விலையின்மேல் ..	நூற்றுக்கு 7½ வீதம்.
30	வாசனையூட்டிய ஸ்பிரிட்டுகள்	இம்பீரியல் காலன் 1-க்கு அல்லது 6 க்வார்ட் புட்டிகளுக்கு.	36 0
31	ஸ்பிரிட் அடங்கிய லிக்யூர்ஸ், கார்டியல்ஸ் (பலம் கொடுக்கும் திராவகங்கள்), மிக்ஸ்சர்ஸ் (கலப்புகள்), இதர மருந்துகள்—		
	(a) உறைப்பைப் பரிசோதிக்கக்கூடாதென்று காட்டும் விதமாய்ப் பதியப்பட்டிருந்தால்	ஷை.	30 0
	(b) பரிசோதிக்கப்பட்டிருந்தால் ..	லண்டன் ப்ரூப்பின் உறைப்புள்ளதான இம்பீரியல் காலன் 1-க்கு அல்லது 6 க்வார்ட் புட்டிகளுக்கு.	21 14 மேலும், ஸ்பிரிட்டின் உறைப்பு லண்டன் ப்ரூப்பைக் காட்டிலும் அதிகமாயிருப்பதற்கு அல்லது குறைந்திருப்பதற்குத் தக்கபடி தீர்வையை அதிகப்படுத்த அல்லது குறைக்க வேண்டும்.
32	மற்ற சகல தினுசுகளையும் சேர்ந்த ஸ்பிரிட்.	ஷை.	ஷை.
33	ஒயின் என்னும் சாராய தினுசுகள்—		
	ப்ரூப் ஸ்பிரிட்டில் நூற்றுக்கு 42 வீதத்துக்கு அதிகமாய் அடங்கியிராத ஷாம்பெய்னும் மற்ற சகல வகைகளையும் சேர்ந்த ஸ்பார்க்லிங் (பொங்கும்) ஒயினும்.	இம்பீரியல் காலன் 1-க்கு அல்லது 6 க்வார்ட் புட்டிகளுக்கு.	9 0
	ப்ரூப் ஸ்பிரிட்டில் நூற்றுக்கு 42 வீதத்துக்கு அதிகமாய் அடங்கியிராத மற்ற சகல தினுசுகளையும் சேர்ந்த ஒயினும் ;	ஷை.	4 8
	ஆனால், ப்ரூப் ஸ்பிரிட்டில் நூற்றுக்கு 42 வீதத்துக்கு அதிகமாக அடங்கியிருக்கிற சகல ஸ்பார்க்லிங் ஒயின்களும் ஸ்டில் (பொங்காத) ஒயின்களும்-' மற்ற சகல தினுசுகளையும் சேர்ந்த ஸ்பிரிட்டுக்குப்' பிரயோகப்படத்தக்க வீதப்படி தீர்வைக்குள்ளாகும்.		

[பிரத்தியேகமான விதங்களின்படி தீர்வை விதிப்பதற்குட்பட்ட வஸ்துக்கள்—தொடர்ச்சி.]

நம்பர்	வஸ்துக்களின் பெயர்.	இவ்வளவுக்குத் தீர்வை அல்லது தீர்வை விதிக்கும் விதம்.	தீர்வை வீதம்.
	சர்க்கரை.		ரூ. அ.
34	சர்க்கரை, எல்லா வகையும், சர்க்கரைப் பாகும் சகல வகையான சர்க்கரைத் தன்மையுள்ள வஸ்துக்களும் அடங்க, ஆனால் மிட்டாய் வகையராக்கள் நீங்கலாக (124-ம் நம்பரைப் பார்க்கவும்).	விலையின்மேல் ..	நூற்றுக்கு 25 வீதம்.
	இதர வகையான போஜனமும் பானமும்.		
35	உப்பு, 2-ம் நம்பரின்கீழ் (தீர்வை செலுத்துவதனின்றும்) நிவாரணை செய்யப்பட்ட உப்பு நீங்கலாக.	அவார்டுபாய் எடையில் 82$\frac{2}{7}$ பௌண்டுள்ள இந்திய மணங்கு ஒன்றுக்கு.	இறக்குமதியாகுமிடத்தில் உற்பத்தி செய்யப்படுகிற உப்புக்கு அந்தந்த காலத்தில் எக்ஸைஸ் தீர்வை எந்த வீதப்படி விதித்து வாங்கத்தக்கதோ அந்த வீதம்
	புகையிலை.		
36	புகையிலை, வேலை செய்யப்படாதது ..	பௌண்ட் ஒன்றுக்கு.	1 0
37	சுருட்டுகளும் ஸிகரெட்டுகளும்	விலையின்மேல் ..	நூற்றுக்கு 75 வீதம்.
38	மற்ற சகல வகைகளையும் சேர்ந்த புகையிலை, வேலை செய்யப்பட்டது.	பௌண்ட் ஒன்றுக்கு.	2 4
	II.—வேலைசெய்யப்படாத வஸ்துக்களும் விளைபொருள்களும், பெரும்பாலும் தயாசெய்யப்படாத சாமான்களும்.		
	நிலக்கரி, சுட்ட நிலக்கரி, பேடென்ட் எரிவஸ்து.		
39	நிலக்கரி, சுட்டநிலக்கரி, பேடென்ட் எரிவஸ்து.	டன் ஒன்றுக்கு ..	0 8
	எண்ணெய் வகைகள்.		
40	கெரொஸின் எண்ணெயும் மோடார் ஸ்பிரிட்டும் ; கெரொஸின் எண்ணெயும் மோடார் ஸ்பிரிட்டும் அல்லாமல், ஏபெல்ஸ் க்ளோஸ் டெஸ்ட் என்னும் பரிசோதனை முறைப்படி சீதோஷ்ண அளவைக் கருவியாகிய பாரன்ஹிட் தெர்மாமிடரில் நூறு டிக்ரிக்குக் குறைந்து தீப்பிடிக்கத்தக்க யாதொரு கனிஜ சம்பந்தமான எண்ணெயும். குறிப்பு.—1919-ம் வருஷத்து 3-வது ஆக்டினால் திருத்தப்பட்டபடியுள்ள 1917-ம் வருஷத்து 2-வது ஆக்டின்படி, மோடார் ஸ்பிரிட்டானது - காலன் ஒன்றுக்கு 6 அணா வீதம் அதிகப்படியான தீர்வை விதிக்கப்படத் தக்கதாகும்.	இம்பீரியல் காலன் ஒன்றுக்கு.	இரண்டு அணா ஆறு தம்பிடி.
41	சீதோஷ்ண அளவைக் கருவியாகிய பாரன்ஹிட் தெர்மாமிடரில் இருநூறு டிக்ரியிலாவது அதற்கு மேற்பட்டாவது தீப்பிடிக்கத்தக்க தன்மையுள்ளதாயிருப்பதும், மரல் அல்லது வேறே நாரை மெதுப்படுத்துவதற்காகவோ வழுவழுப்பு உண்டாக்குவதற்காகவோ அல்லாமல வேறே யாதொரு காரியத்துக்காக சாதாரணமாய் உபயோகிக்கப்படாததுமாயுள்ள கனிஜ சம்பந்தமான எண்ணெயும், பாரன்ஹிட் தெர்மாமிடரில் நூற்றைம்பது டிக்ரியிலாவது அதற்கு மேற்பட்டாவது தீப்பிடிக்கத்தக்க தன்மையுள்ளதாயிருப்பதும், எரிவஸ்துவாகவோ சுகாதார சம்பந்தமான அல்லது தேகாரோக்கிய சம்பந்தமான ஏதோ காரியத்திற்காகவோ அல்லாமல் மற்றப்படி சாதாரணமாய் உபயோகிக்கப்படாததுமாயுள்ள கனிஜ சம்பந்தமான எண்ணெயும்.	விலையின்மேல் ..	நூற்றுக்கு 7$\frac{1}{2}$ வீதம்.

[பிரத்தியேகமான வீதங்களின்படி தீர்வை விதிப்பதற்குட்பட்ட வஸ்துக்கள்—தொடர்ச்சி.]

நம்பர்	வஸ்துக்களின் பெயர்.	இவ்வளவுக்குத் தீர்வை அல்லது தீர்வை விதிக்கும் விதம்.	தீர்வை வீதம்.	
	III.—முழுவதுமாவது பெரும்பாலுமாவது தயார் செய்யப்பட்ட சாமான்கள்.			
	ஆயுதங்களும் மருந்துகுண்டு முதலிய சாமான்களும் ராணுவ முஸ்தீதுகளும்.			
42	12-வது நம்பரில் குறிட்பிட்ட நிவாரணைகளுக்குட்பட்டு—		ரூ.	
	(1) பிஸ்டல் தவிர, காஸ் வாயுவைக்கொண்டும் வெறும் வாயுவைக்கொண்டும் சுடப்படுகிற துப்பாக்கிகளும் (ரைபில்) முறுக்குக்குழல் துப்பாக்கிகளுமடங்க வெடியாயுதங்கள்.	ஒவ்வொன்றுக்கு.	15	
	(2) அவைகளுக்குக் குழாய்கள், ஒற்றையாயிருந்தாலுஞ்சரி இரட்டையாயிருந்தாலுஞ்சரி.	,,	15	
	(3) தானாய் இயங்கும் பிஸ்டல்களும் ரிவால்வர்களுமடங்க பிஸ்டல்கள்.	,,	15	
	(4) அவைகளுக்குக் குழாய்கள், ஒற்றையாயிருந்தாலுஞ்சரி இரட்டையாயிருந்தாலுஞ்சரி.	,,	15	
	(5) காஸ்வாயுவைக்கொண்டு சுடப்படுகிற துப்பாக்கிகளும் முறுக்குக்குழல் துப்பாக்கிகளுமடங்க வெடியாயுதங்களுக்காக உபயோகிக்கப்படும் மெயின் ஸ்ப்ரிங்குகளும் மாகஜீன் ஸ்ப்ரிங்குகளும்.	,,	5	} அல்லது விலையின் மேல் நூற்றுக்கு 30 வீதம்; இவைகளில் எது அதிகமாயிருக்கிறதோ அது.
	(6) துப்பாக்கிக் கட்டைகளும் ப்ரீச் ப்ளாக் என்னும் பாகமும்.	,,	3	
	(7) ரிவால்வர் ஸிலிண்டர்கள், அவைகளில் பிடிக்கும் தோட்டா ஒவ்வொன்றுக்கு.	,,	2	
	(8) (சூத்திரங்கள்) ஆக்ஷன்கள் (ஸ்கெலிடனும் வேஸ்டரும் அடங்க), ப்ரீச் போல்டுகள், அவைகளின் தலைகள், காகிங் பீஸ் எனனும் பாகங்கள், வாய் வழியாய் கெட்டிக்கும் ஆயுதங்களுக்கு லாக்குகள்.	,,	1	
	(9) முறுக்குக்குழலுள்ள ஆயுதங்களுக்கு தோட்டாக்களைக் செய்வது கெட்டிப்பது அல்லது மூடுவதற்கான யந்திரங்கள்.	விலையின்மேல் ..	நூற்றுக்கு 30 வீதம்.	
	(10) முறுக்குக் குழலுள்ள ஆயுதங்களில் தோட்டாக்களுககுக் காப் போடுவதற்கான யந்திரங்கள்.	விலையின்மேல் ..	நூற்றுக்கு 30 வீதம்.	
	ரஸாயன வஸ்துக்களும், மூலிகைகளும், ஔஷதங்களும்.			
43	அபினியும் அதன் ஆல்கலாய்டுகளும் அவைகளிலிருந்து தயார் செய்யப்படுபவைகளும்.	80 தோலாக்கள் கொண்ட சேர் ஒன்றுக்கு.	ரூ. 24 அ. 0	
	இழையும் நெய்யப்பட்ட வஸ்திர வகைகளும்.			
44	பஞ்சு திரித்த நூலும் இழையும் தையல் வேலைக்கான அல்லது இழைபோடுவதற்கான நூலும்.	விலையின்மேல் ..	நூற்றுக்கு 5 வீதம்.	
45	பீஸ் கணக்கான பஞ்சு துணிகள் பலவகைப்பட்டவை. ..	விலையின்மேல் ..	நூற்றுக்கு 11 வீதம்.	
46	நெருப்புக்குச்சிகள்—			
	(1) சராசரி 100 நெருப்புக்குச்சிகளுக்கு மேற்படாமல் அடங்கியுள்ள பெட்டிகளில்.	ஒரு க்ரோஸ் பெட்டிகளுக்கு.	ரூ. 1 அ. 8	
	(2) சராசரி 100 நெருப்புக்குச்சிகளுக்கு மேற்பட்டு அடங்கியுள்ள பெட்டிகளில்.	ஒவ்வொரு பெட்டியிலுள்ள ஒவ்வொரு 25 நெருப்புக்குச்சிகள் அல்லது அதன் பாகத்துக்கு, ஒரு க்ரோஸ் பெட்டிகளுக்கு.	0 6	

3-ம் பாகம்.

[விலையின்மேல் நூற்றுக்கு 2½ வீதம் தீர்வை விதிப்பதற்குட்பட்ட வஸ்துக்கள்.]

ந. வஸ்துக்களின் பெயர்.

I.—போஜனம், பானம், புகையிலை.

தானியமும் பயறு வகையராவும் மாவும்.

47 சகல வகைகளையும் சேர்ந்த தானியமும் பயறுவகையராவும், உடைத்த தானியமும் பயறு வகையராவும் அடங்கவும் மாவு நீங்கலாகவும் (68-ம் நம்பரைப் பார்க்கவும்).

போஜன பதார்த்தங்களும் பலதினுசு மளிகைச் சாமான்களும்.

48 காடி, பீப்பாய்களில்.

II.—வேலை செய்யப்படாத வஸ்துக்களும் விளை பொருள்களும், பெரும்பாலும் தயார்செய்யப்படாத சாமான்களும்.

மரமும் வெட்டுமரமும்

49 விறகு.

III.—முழுவதுமாவது பெரும்பாலுமாவது தயார்செய்யப்பட்ட சாமான்கள்.

ரஸாயன வஸ்துக்களும் மூலிகைகளும் ஔஷதங்களும்.

50 அன்னபேதி, பச்சை.

யந்திர வகைகள்.

51 யந்திரவகைகள் ; அவையாவன:—பாய்லர்கள் என்னும் கொப்பரைகளும் அவைகளைச் சேர்ந்த பாகங்களுமடங்க ப்ரைம் மூவர்கள் என்னும் இயக்கும் மூலசூத்திரங்களும் அவைகளைச் சேர்ந்த பாகங்களும் ; லோகொமொடிவ் என்னும் இயங்கும் சக்தியமைந்தவையும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டுபோகக்கூடியவையுமான என்ஜின்களும், நீராவி ரோலர்களும், தீயவிக்கும் என்ஜின்களும், விவசாயமல்லாத வேறே காரியங்களுக்காக உத்தேசிக்கப்பட்ட மோடார் ட்ராக்டர் என்னும் இழுப்பதற்கான சாதனங்களும், வேலைசெய்யும் பாகங்களிலிருந்து ப்ரைம் மூவரை வேறுபடுத்த முடியாத மற்ற யந்திரங்களும் இவைகளில் அடங்கும்.

யந்திர வகைகளும் (அவைகளைச் சேர்ந்த பாகங்களும்) ; என்றால், கையினால் அல்லது பிராணிகளின் உழைப்பினாலல்லாமல் மின்சாரம், நீராவி, ஜலம், தீ அல்லது வேறே சக்தியைக்கொண்டு இயக்கப்படவேண்டியவைகளாகவாவது, உபயோகத்துக்குக் கொண்டு வருவதற்குமுன்னே இயங்கும் மற்ற பாகங்களை அனுசரித்து பிகியவேண்டியவைகளாகவாவது இருக்கிற யந்திரங்கள் அல்லது யந்திரத்தொகுதிகள் ; யந்திரங்களை ஓட்டுவதற்காக சகல வித சாமான்களையுங்கொண்டு செய்யப்பட்ட வார்ப்பட்டைகளும் இவைகளில் அடங்கும் :

ஆனால், ஷை வார்த்தையிலே கையினால் அல்லது பிராணிகளின் உழைப்பினால் இயக்கவேண்டிய கருவிகளும் உபகரணங்களும் அடங்கமாட்டா ; மேலும், யந்திரம் இயங்குவதற்கு இன்றியமையாதவைகளாகவும், உருவத்தினாலாவது வேறே விசேஷ லக்ஷணத்தினாலாவது வேறே எந்தக் காரியத்துக்கும் ஏற்றதல்லாதவைகளாகவும் இருக்கிற வஸ்துகள் மாத்திரமே யந்திரத்தைச் சேர்ந்த பாகங்களாக ஒப்புக்கொள்ளப்படும்.

குறிப்பு.—உலோகமல்லாத வேறே வஸ்துக்களினால் செய்யப்பட்ட யந்திரவகைகளும் அவைகளைச் சேர்ந்த பாகங்களும் இந்தப் பதிவில் அடங்கும்.

இரும்பும் எழுகுமல்லாத வேறே உலோகங்கள்.

52 ஈய ரேக்குகள், தேயிலை டப்பிகளுக்காக.

பலவகைப்பட்டவை.

53 ஏரோப்ளேன் என்னும் ஆகாய விமானங்களும், ஏரோப்ளேன்களின் பாகங்களும், ஏரோப்ளேன் என்ஜின்களும், ஏரோப்ளேன் என்ஜின்களின் பாகங்களும்.

54 அச்சடிப்பதற்கும் லிதொக்ராப் செய்வதற்குமான சாமான்கள் ; அவையாவன :—அச்சுயந்திரங்கள், எழுத்துக்கள், மை, அலூமினியத்தால் செய்த லிதொக்ராப் தகடுகள், பித்தளை ரூல்கள், எழுத்துக்களைப் பொறுக்கிச் சேர்க்குபடியான பலகைகள், எழுத்துக்களைப் பக்கங் கட்டுவதற்கான • கேஸுகளென்னும் இரும்புச் சட்டங்கள், இம்போஸிங் மேஜைகள், லிதொக்ராபிக் கற்கள், ஸ்டிரியோ ப்ளாக்குகள், மரத்தினால் செய்த ப்ளாக்குகள், ஹாப்டோன் ப்ளாக்குகள், எலெக்ட்ரோ டைப் ப்ளாக்குகள், ரோலர் மோல்டுகள், ரோலர் ப்ரேம்களும் (சட்டங்களும்) ஸ்டாக்குகளும், ரோலர் காம்பொஸிஷன், ஸ்டாண்டிங் ஸ்க்ரூவும் காகிதம் அல்லது துணியை பளபளப்பான அட்டைகளுக்கும் சூடாயிருக்கும் உலோகப் பலகைகளுக்கும் நடுவில் வைத்தழுத்திப் பளபளப்பாக்குவதற்கான ஹாட் ப்ரெஸ் என்னும் யந்திரங்களும், துளைகள் செய்வதற்கான யந்திரங்கள், புஸ்தகங்களின் அட்டைகளின்மேல் பொன்னால் பெயரும் சித்திரங்களும் போடுவதற்கான கோல்ட் ப்ளாக்கிங் ப்ரெஸ் என்னும் யந்திரங்கள், காலி ப்ரெஸ் என்னும் யந்திரங்கள், ப்ரூப் ப்ரெஸ் என்னும் யந்திரங்கள், ஆர்மிங் ப்ரெஸ் என்னும் யந்திரங்கள், தாமிரத் தகட்டின்மேல் அச்சடிக்கும் யந்திரங்கள், ரோலிங் ப்ரெஸ் என்னும் யந்திரங்கள் ரூல் போடுவதற்கான யந்திரங்கள், ரூல் போடும் பேனாக்களைச் செய்வதற்கான யந்திரங்கள், லெட் என்னும் ஈயத் தகடுகளையும் ரூல் என்னும் (பித்தளைத்)தகடுகளையும் வெட்டும் கருவிகள், அச்செழுத்துகளை வார்ப்படம் வார்க்கும்யந்திரங்

ந. வஸ்துக்களின் பெயர்.

கள், அச்செழுத்துக்களை அடுக்கி வார்ப்படம் வார்க்கும் யந்திரங்கள், ரூல்களை வளைக்கும் யந்திரங்கள், ரூல் மைடரிங் மெஷின்கள், தாமிரப்பூச்சு கொடுக்கும் யந்திரங்கள், லெட்டுகள், மரத்தினாலும் உலோகத்தினாலும் செய்த கவாய்ன் என்னும் மூலைச்சட்டங்கள், ஷூடிங் ஸ்டிக் என்னும் மரத்துண்டுகளும், காலிகளும், ஸ்டீரியோ டைப் (நிலையான அச்செழுத்துக்கள்) செய்வதற்கான உபகரணங்கள், எழுத்துக்களுக்கு மத்தியில் இடம் விடுவதற்காக உபயோகிக்கும் மெட்டல் பர்னிச்சர் என்னும் உலோகத்துண்டுகள், காகிதத்தை மடிப்பதற்கான யந்திரங்கள், பக்கங்களைக் குறிப்பதற்கான யந்திரங்கள்; ஆனால் இவைகளில் காகிதம் அடங்காது (99-ம் நம்பரைப் பார்க்கவும்).

55 தேயிலையை உலர்த்துவதற்கான ராக் என்னும்சட்டங்கள்.

56 உலோகத்தினாலாவது மரத்தினாலாவது செய்யப்பட்ட தேயிலைப்பெட்டிகள், முழுமையாக இறக்குமதி செய்யப்பட்டாலுஞ்சரி பாகங்களாக இறக்குமதி செய்யப்பட்டாலுஞ்சரி; ஆனால், அவை - தேயிலையைப் பெருத்த அளவில் கொண்டுபோவதற்காகச் சிப்பங் கட்டும்பொருட்டு இறக்குமதி செய்யப்படுகின்றனவென்று கஸ்டம் கலெக்டர் தெரிந்து திருப்தியடையவேண்டும்.

57 ஆடுமாடுகளின் தீனியும், தவிடும், ஓர்வகைக் கோதுமை நொய்யும்.

4-ம் பாகம்.

[விலையின்மேல் நூற்றுக்கு 10 வீதம் தீர்வை விதிப்பதற்குட்பட்ட வஸ்துக்கள்.]

II.—வேலை செய்யப்படாத வஸ்துக்களும் விளைபொருள்களும், பெரும்பாலும் தயார்செய்யப்படாத சாமான்களும்.

